4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண். 435/2022 நாள்: 06.04.2026 வா.சா.1 – விஜயலட்சுமி**

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் ஆழியாறு முதியோர் இல்ல தோட்டத்தில் 1994 ல் இருந்து வசித்து வருகிறேன். 1 முதல் 3 பிரதிவாதிகள் போடிப்பட்டி மற்றும் வாளவாடியில் குடியிருந்து வருகிறார்கள். நான் 11ம் வகுப்பு வரை படித்துள்ளேன். தாவா சொத்திற்கும் நான் வசிக்கும் இடத்திற்கும் இடையே சுமார் 35 முதல் 40 கிலோமீட்டர் தூரம் இருக்கும். 1 முதல் 3 பிரதிவாதிகள் வசித்து வரும் இடத்திற்கும் தாவா சொத்திற்கும் இடையே சுமார் 5 கிலோமீட்டர் தூரம் இருக்கும். தாவா சொத்து 1 முதல் 3 பிரதிவாதிகளின் தாயார் வீரம்மாளுக்கு 1973 ம் வருட கிரைய ஆவணத்தின் படி பாத்தியப்பட்டது. மேற்படி வீரம்மாளிடம் இருந்து 1995 ம் ஆண்டு தாவா சொத்தை நான் கிரையம் வாங்கியுள்ளேன். நான் மேற்படி வீரம்மாளிடமிருந்து 8.63 ஏக்கர் கிரையம் வாங்கியுள்ளேன்.

2. தாவா சொத்தின் சர்வே எண்.170/4, 5 ஆகும். நான் மேற்படி இரண்டு சர்வே எண்ணில் உள்ள சொத்தை தான் கிரையம் வாங்கினேன். சர்வே எண்.168/1, 162/3 ஆகிய சொத்துக்களையும் நான் கிரையம் வாங்கியுள்ளேன், அது உட்பிரிவு செய்யப்பட்ட சொத்து என்று சாட்சி கூறுகிறார். எந்தெந்த சர்வே எண்ணில் எவ்வளவு விஸ்தீரணம் உள்ள சொத்தை நான் கிரையம் வாங்கினேன் என்று சரியாக சொல்லமுடியாது என்றால் சரிதான். நான் வீரம்மாளிடமிருந்து தாவா சொத்தை கிரையமே வாங்கவில்லை, அதனால் தான் சொத்தின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் தெரியவில்லை என்றால் சரியல்ல. நான் வாங்கிய கிரைய ஆவணத்தை அசலை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால்

சரிதான், ஏனென்றால் அது தொலைந்துவிட்டது.

3. நான் பேருந்தில் செல்லும் போது மேற்படி கிரைய ஆவணம் தொலைந்து போய்விட்டது, அது சம்பந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன். 2012 ம் வருடம் என்னுடைய கிரைய ஆவணம் காணாமல் போய்விட்டது. 2014 ம் ஆண்டு மேற்படி கிரைய ஆவணம் காணாமல் போனது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். மேற்படி புகார் சம்பந்தமாக போலிசார் எனக்கு ரசீது வழங்கினார்கள். மேலும் மேற்படி காணாமல் போன கிரைய ஆவணத்தை கண்டுபிடித்து தரமுடியவில்லை என்று போலிசார் ரசீது வழங்கியுள்ளார்கள். நான் புகார் கொடுத்த ஒரு வாரம் கழித்து மேற்படி ரசீதை எனக்கு வழங்கினார்கள். மேற்படி கிரைய ஆவணம் தொலைந்து போவதற்கு முன்பாக என் கைவசம் தான் இருந்தது. எனக்கு கிரையம் கொடுத்த வீரம்மாள் என்ன படித்துள்ளார் என்று எனக்கு தெரியாது. மேற்படி கிரைய ஆவணத்தில் வீரம்மாள் கையெழுத்து போட்டாரா, கைரேகை வைத்தாரா என்று எனக்கு ஞாபகம் இல்லை.

4. மேற்படி வீரம்மாளுக்கு படிப்பறிவு இல்லை என்றும், அவர் கைரேகை தான் வைப்பார் என்றும், கையெழுத்து எதுவும் போடமாட்டார் என்றால் சாட்சி ஞாபகம் இல்லை என்று கூறுகிறார். நான் விஜயலட்சுமி என்ற நபரை வீரம்மாள் என்று ஆள்மாறாட்டம் செய்து நான் மோசடியாக தாவா சொத்து சம்பந்தமாக கிரைய ஆவணம் ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையில் வீரம்மாள் கிரைய ஆவணம் எழுதி கொடுத்திருந்தால் கைரேகை தான் வைத்திருப்பார், கையெழுத்து எதுவும் போட்டிருக்க மாட்டார் என்றால் சரியல்ல. உண்மையிலேயே கிரையம் வாங்கியிருந்தால் நான் வீரம்மாள் கிரைய ஆவணத்தில் கையொப்பம் போட்டாரா, கைரேகை வைத்தாரா என்று சரியாக சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள விஜயலட்சுமி என்று போடப்பட்டுள்ள கையொப்பம் என்னுடைய கையொப்பம் தான். மேற்படி வா.சா.ஆ.1 ஆன கிரைய ஆவணத்தில்

வீரம்மாளின் கைரேகை மற்றும் கையொப்பம் இல்லை என்றால் சாட்சி நகல் என்பதால் கையொப்பம் இல்லை என்று கூறுகிறார்.

5. அசல் கிரைய ஆவணத்தின் புகைப்பட நகலை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை எனக்கு வீரம்மாள் கிரையம் செய்து கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் ஆழியாறு சொத்தை விற்பனை செய்து தான் தாவா சொத்தை கிரையம் வாங்கினேன் என்று வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் வாளவாடியை சேர்ந்த வீரம்மாளிடமிருந்து தான் தாவா சொத்தை கிரையம் வாங்கினேன். நான் உண்மையில் கிரையம் வாங்கியிருந்தால் அசல் ஆவணத்தை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து 1 முதல் 3 பிரதிவாதிகளின் கைவசத்தில் உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து என் பெயரில் தான் உள்ளது என்பதை காட்டுவதற்கு சிட்டா, அடங்கல் ஆகிய ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

6. தாவா சொத்திற்குரிய சிட்டா, அடங்கல் ஆகியவை வீரம்மாள் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். நான் 1995 ம் ஆண்டு தாவா சொத்தை கிரையம் வாங்கிய பிறகு எதற்காக என் பெயருக்கு பட்டா மாறுதல் செய்யவில்லை என்றால் சாட்சி 1வது பிரதிவாதி சீனிவாசன் இடைஞ்சல் செய்ததால் பட்டா மாறுதல் செய்ய முடியாமல் போய்விட்டது என்று சாட்சி கூறுகிறார். தாவா சொத்தின் சுவாதீனம் 1 முதல் 3 பிரதிவாதிகளின் கைவசம் தான் உள்ளது என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய வீரம்மாள் தற்போது காலமாகிவிட்டார் என்றால் சரிதான். மேற்படி வீரம்மாளுக்கு 1 முதல் 3 பிரதிவாதிகள் தான் வாரிசுகள் என்றால் சரிதான். 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கிடையே தாராபுரம் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.379/2018 என்ற வழக்கை தாக்கல் செய்த விவரம் எனக்கு முதலில் தெரியாது, பின்னிட்டு தான் தெரியும்.

7. தாவா சொத்தில் மின் இணைப்பு பெறுவதற்காக சென்ற போது தான் மேற்படி வழக்கு உள்ள விவரம் எனக்கு தெரிய வந்தது. மேற்படி வழக்கு இருக்கின்ற விவரம் 2022 ம் வருடம் எனக்கு தெரிய வந்ததாக ஞாபகம். மேற்படி வழக்கில் 1வது பிரதிவாதிக்கு தாவா சொத்தில் ⅓ பாகம் கிடைக்கதக்கது என்று நீதிமன்றம் தீர்ப்பாணை பிறப்பித்துள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் 1வது பிரதிவாதி தாக்கல் செய்த இறுதிநிலை தீர்ப்பாணை மனுவில் நீதிமன்ற ஆணையர், தாலுகா சர்வேயர், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் அவரது உதவியாளர் ஆகியோர் தாவா சொத்தை அளப்பதற்கு வந்தார்கள் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையாளர் தாவா சொத்தை அளந்து மேற்படி வழக்கில் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

**பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க மேலும் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN
Digitally signed by M NAMBIRAJAN
Date: 2026.04.06 17:57:41 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.